எந்த அளவுக்குக் குறைத்து பேரூராட்சியிடமிருந்தும், ஊராட்சி மன்றத்திடமிருந்தும் வசூலிக்க முடியுமோ அந்த அளவுக்குத் தான் வசூலிக்கிறார்கள்.

விவேகானந்தபுரத்தில் படகுத்துறை

* 233 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவுக் குழுவினரிடமிருந்து விவேகானந்தபுரத்தில் அவர்களுக்குச் சொந்தமாக ஒரு போட் ஜெட்டி (Boat Jetty) கட்டுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு மனு ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கன்னியா குமரியில் விவேகானந்தபுரத்திற்கு அருகில் ஒரு போட் ஜெட்டி கட்டுவதற்கு விவேகானந்தர் நினைவுக் குழுவினர் முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, விவேகானந்தர் நினைவாலயத்திற்குப் போவதற்கு போட் ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதில் செல்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப் படுகிறதா ? இந்தமாதிரி போட் வசதிகளை மேலும் அதிகப் படுத்தித் தருவதற்கு ஏற்பாடு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.